**றுஹுண பல்கலைக்கழகம் - 2018**

**--------------------------------------------------------------**

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------------------

றுஹுண பல்கலைக்கழகத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிகர சொத்து மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, றுஹுண பல்கலைக்கழகத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

----------------------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கின்ற உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், றுஹுண பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். பல்கலைக்கழகத்தைக் கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்குமாயினும் தவிர, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் றுஹுண பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

றுஹுணு பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் றுஹுணு பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தலாக உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பெரிதாகும்.தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும்உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதப்படவில்லை.
- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையில் அத்தகைய கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக

இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வாளரின் அறிக்கைத் தினம் வரை பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வின் நோக்கெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, பல்கலைக்கழகத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது றுஹுண பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்பட்டுள்ளது என்றும்,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நிமயங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 99 ஆம் பந்தியுடன் இணங்காது பல்கலைக்கழக சொத்துக்களை வாடகைக்கு வழங்கி அதன்மூலம் பெற்ற ரூபா 4,033,060 வாடகை வருமானமானது வருமான, செலவினக் கணக்கில் சீராக்கல் செய்யப்படாது நிதியக் கணக்கொன்றில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அக்கணக்கில் ரூபா 11,229,993 மீதி இருந்தது. | 2009/01 உள்ளகச் சுற்றறிக்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 304 ஆம் 314 ஆம் வழிகாட்டிகள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு அந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் பெறப்பட்ட வருமானமும் செலவினமும் அந்நிதியக்கணக்கின் கீழ் கணக்கிலிடப்பட்டதெனவும் அறியத் தருகின்றோம். | ஆண்டிற்குரிய சகல வருமானமும் செலவினமும் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 26 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாது பல்கலைக்கழகம் மீளாய்வாண்டின்போது நன்கொடையாகப் பெற்ற ரூபா 2,154,806 கொள்வனவுப் பெறுமதியுடைய சொத்துக்களின் நிகர பெறுமதி பூச்சியமாகும் விதத்தில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறைக்கணக்கீட்டு நியமம் 07 இன் 23 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவதொரு சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் பரிவர்த்தனை அற்ற கொடுக்கல் வாங்கல்களின் மூலம் (Non Exchange Transaction) சுவீகரிப்படும்போது அதன் கிரயமாக, சுவீகரிப்புத் தினத்தில் உள்ளவாறான அதன் நியாயமான பெறுமதி இனங் காணப்பட வேண்டும். ஆயினும், கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட செயற்திட்டங்களது நோக்கங்களின் பொருட்டு பல்கலைக்கழகத்திற்குக் குறித்த நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு சொத்துக்கள் றுஹுண பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. றுஹுண பல்கலைக்கழத்தால் மேற்படி செயற்திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சகல சொத்துக்களதும் கிரயத்தை உள்ளடக்கிய விபரம் பல்கலைக்கழகத்திடம் உள்ளதால் இச்செயற்திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் பரிவர்த்தனை அற்ற கொடுக்கல் வாங்கல்களின் மூலம் பெறப்பட்ட நன்கொடையாக அமையாது. | இச்செயற்திட்டம் பல்கலைக்கழகத்தால் அமுலாக்கப்பட்டு அதற்கான சொத்துக்கள் பல்கலைக்கழகத்தால் கொள்வனவு செய்யப்படின் செயற்திட்ட முடிவில் பல்கலைக்கழத்திடம் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே அச்சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். ஆகவே, அத்தினத்தில் உள்ளவாறு நிகர பெறுமதியானது பூச்சியமாக இருந்தபோதும், தொடர்ந்து சொத்துக்களை பயன்படுத்த முடியுமாதலால் அச்சொத்துக்களது நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாது ரூபா 954,572,294 கிரயமுடைய 11 சொத்துக்களது கழிவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது 649 ஆம் சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்துரை மற்றும் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்தொன்றின் பயன்படு ஆயுட்காலம் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் | இச்சொத்துக்களைச் சேர்ந்த பெரும்பாலானவற்றின் நிகர பெறுமதி பூச்சியமாவதுடன், ஏனைய சொத்துக்களதும் நிகர பெறுமதி பூச்சியமாகும் நிலையை நெருங்குவதால் சகல |

| | | |
|---|---|---|
| | முன்னைய மதிப்பீடு மாற்றமடைதற்கான சீராக்கல் கணக்காய்வில் தெரிவிக்கப்பட்டவாறு சொத்தொன்றினது கிரயம் சூனியமாகுமிடத்து மாத்திரம் அல்லாது ஒட்டுமொத்த சொத்து வகைகளுக்கும் (Entire Class Assets) பொருந்துமாயின் மாத்திரமே அதனைப் பொருத்தமாகக் கொள்ளலாம். | சொத்துக்களதும் பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் என்பவற்றுக்கிடையே பெருமளவு வேறுபாடு நிலவுவதால் 07 ஆம் இலக்க நியமத்தின் 65 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் நிர்மாண வேலைகள் மற்றும் வழங்கல் சம்பந்தமாக மீளாய்வாண்டில் அறவீடு செய்த ரூபா 10,044,379 தாமதக் கட்டணம் வருமான, செலவினக் கணக்கில் செலவு வைக்கப்படாது ஐந்தொகையில் பொறுப்பாகக் காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் இக்கணக்கில் இருந்த மீதி ரூபா 62,486,253 ஆகும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின்படி குறித்தவொரு காலப்பகுதியினது செயற்பாட்டுப் பெறுபேறு கணிப்பிடப்படுவதாயின் வருமானக் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். வருமான, செலவினக் கூற்றைத் தயாரிக்கும்போது செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாகிய மீண்டுவரும் தன்மையிலான வருமானம் வருமான, செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டும். அதற்கமைய, கணக்காய்வில் தெரிவிக்கப்பட்ட நிர்மாணச் செலவினமும் மூலதன வழங்கலும் சம்பந்தமான தாமதக் கட்டணம் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாகிய வருமானம் அல்ல. ஆகவே வருமானக் கணக்கில் அதனைச் செலவு வைப்பதற்கான அவசியம் இல்லை. மேலும், உடன்படிக்கை மீறல் காரணமாக அறவிடப்படும் கட்டணம் நியாயமாக விளக்கமளிக்கப்படுமிடத்து மீண்டும் குறித்த நபர்களுக்கே திருப்பிச் | இச் செலவினம் மூலதனத் தன்மை வாய்ந்த செலவினத்தால் உருவாகிய வருமானமாகியபோதும், பல்கலைக்கழகத்தின் சகல மூலதனச் செலவினமும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான மூலதன நடவடிக்கைகளே ஆகும். ஆகவே, இச்செலவினத்தின் மூலம் உருவாகிய வருமானம் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றில் இடப்பட வேண்டும். இருசாராரும் உடன்படிக்கையில் ஈடுபட்டதானது ஒரு சாரார் உடன்படிக்கையின் பிரிவொன்றை மீறுமிடத்து இன்னுமொரு சாரார் ஆறுதலைப் பெறுவதற்கே ஆகும். அதற்கமைய அறவிடப்படும் கட்டணம் மீண்டும் செலுத்தப்படுவதற்கான கடப்பாடு கிடையாதாகையால் அது வருமானமாக இனங் காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்தப்பட வேண்டிய கடப்பாடு உள்ளதால் அது பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மருத்துவ பீடத்தின் வெளிநாட்டு மாணாக்கரது பயிற்சிகளுக்கு அறவிடப்படும் கட்டணம் நிதியத்தின் (Elective Student Fund) மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,609,372 பெறுமதியுடைய பயிற்சி உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | தவறு காரணமாக சேர்த்துக் கொள்ளப்படாது போனதும் உங்களால் சுட்டிக்காட்டப்பட்டதுமான ரூபா 6,609,372 பயிற்சி உபகரணங்களின் பெறுமதி 2019 MEJ 2015 எனும் நாட்குறிப்பின் மூலம் மூலதனமாக்கப்பட்டுள்ளது. குறித்த திருத்தங்கள் 2019ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும். | கொடுக்கல் வாங்கல்கள் உடனடியாகக் கணக்கிலிடப்பட வேண்டும். |
| (இ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாது வாகன விற்பனையால் பெற்ற தொகையை வாகன விற்பனை நிதியம் ஒன்றை உருவாக்கி அதில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் இருந்த மீதி ரூபா4,787,065 ஆகும். | திறைசேரியிலிருந்து பெறப்படும் வருடாந்த நிதியேற்பாடு போதுமானதாக இல்லாமையால் மேற்படி தொகை திருப்பிச் செலுத்தப்படாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வாகன விற்பனை வருமானம் திரட்டு நிதியத்திலிடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | விசேட சுற்றறிக்கைப் பிரகாரம் விடுக்கப்பட்ட பணிப்புரையாதலால் அதற்கிணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான போலிச் சொத்துக்களது தேய்மானம் ரூபா 2,578,592 ஆகவிருத்தல் வேண்டுமாயினும், நிதிக்கூற்றுக்களில் அது 2,151,806 ஆக ரூபா 426,786 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்வதுடன் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். | ஆண்டிற்கான தேய்மானம் சரிவரச் சீராக்கல் செய்யப்பட வேண்டும். |
| (உ) | திறைசேரியால் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படும் நிதியேற்பாட்டின் அடிப்படையில் உருவாகிய நிதி நிலையான வைப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பொருட்டுப் பெறப்பட்ட | திறைசேரியால் பல்கலைக்கழத்திற்கு வழங்கப்படும் நிதியேற்பாட்டால் உருவாகும் நிதி நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டு வட்டி வருமானம் பெறப்பட்டதாகக் கணக்காய்வில் தெரிவிக்கப்பட்டபோதும், | Intergrated Fund நிதியமானது உடன்படிக்கை அல்லது பிணைமுறி மீறல் காரணமாக அறவிடப்படும் தொகை மற்றும் வெளிநாட்டு பட்டப்படிப்பு விண்ணப்பதாரர்களிடமிரு |

| | | |
|---|---|---|
| வருடாந்த வட்டியாகிய ரூபா 26,392,852 வருடாந்த வருமானக் கூற்றில் வருமானமாக இனங்காணப்படாது ஒவ்வொரு நிதியக் கணக்கிலும் செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் இக்கணக்கு மீதியினது கூட்டுத்தொகை ரூபா 36,876,083 ஆகவிருந்தது. | University Intergated Fund நிதியத்தில் மூல வட்டி வருமானம் நிலையான வைப்பு முதலீட்டின் மூலம் உருவாகிய வட்டி வருமானம் அல்ல எனக் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம். நிலையான வைப்பின் பொருட்டு பயன்படுத்தப்படும் நிதி உடன்படிக்கை மற்றும் பிணை முறி மீறல்களுக்கான அறவீடுகள், வெளிநாட்டு பட்டப்பின்படிப்பு விண்ணப்ப தாரர்களிடமிருந்து அறவிடப்படும் தொகை என்பன வெளிச் சேவைகளால் ஈட்டப்படும் வருமானச் சேகரிப்பு ஆகும் எனக் கணக்காய்வின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம். | ந்து அறவிடப்படும் நிதி என்பன திரட்டு நிதியத்தின் பிரிவு ஆகையால் இந்நிதியங்கள் மூலம் பெறப்படும் வருமானம் வருமானமாக வருமானக் கூற்றில் இனங்காணப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 தொடக்கம் 2017 வரை மக்கள் வங்கி தீர்வைக் கணக்கிலிருந்த ரூபா 83,950 பெற வேண்டிய மீதியானது மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கையின்றி இருந்தது. | குறித்த மீதியை எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | அம்மீதியை விரைந்து தீர்வு செய்ய வேண்டும். |

### 1.6.2 கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளில் இனங்காணப்பட்ட ரூபா 4,566,031 கடன் கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கையின்றி இருந்தது. | குறித்த கடன் கொடுத்தோர் மீதி சம்பந்தமாக வழங்கற் பிரிவுக்கு அறிவித்துள்ளோம். எதிர்காலத்தில் குறித்த மீதியை தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நெடுங்காலக் கடன் மீதி விரைவாகத் தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்ட ரூபா 9,758,750 கொடுப்பனவு செய்யப்படாத மாணாக்கர் உதவிப் பண மீதியில் 2011 முதல் 2015 வரை வழங்கப்படாத ரூபா 9,535,050 மாணாக்கர் உதவிப் பணமும் உள்ளடங்கியிருந்தது. மீளாய்வாண்டளவில் இந்த மாணாக்கர் உதவிப் பண மீதி சம்பந்தமாக கோரிக்கை எதுவும் இல்லாமையால் அதனை நிதியேற்பாட்டைச் செய்த நிறுவனத்துடன் இணைந்து தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு செய்யப்படாத மாணாக்கர் உதவிப்பண மீதியானது வேறொரு கணக்கு மூலம் பேணப்படவில்லை. முன்னைய ஆண்டுகளில் போதியளவு மீண்டுவரும் நிதி கிடைக்காமையால் அத்தொகை மீண்டுவரும் கொடுப்பனவுகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. போதிய பணச் சேகரிப்பின் பின்னர் குறித்த தொகையை நிதியேற்பாட்டு நிறுவனத்திற்கே வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | இந் நிதியேற்பாடானது வேறொரு செயற்பாட்டிற்காக வழங்குவதாகையால் அது வேறெந்த நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்பட முடியாது. குறித்த பணிக்குப் பயன்படுத்தப்படாதுவிடின் நிதியேற்பாட்டை வழங்கிய நிறுவனத்திடமே அதனை திருப்பிச் செலுத்த வேண்டும. |

### 1.6.3 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நூலகப் புத்தக முற்பண மீதி ஆகிய (வெளிநாடு) ரூபா 564,029 ஆகும். இதில் ரூபா 540,466 க்கு புத்தகங்களுக்கான கட்டளை வழங்கப்பட்டு 08 - 12 ஆண்டுகளாகியபோதும், அம் மீதியைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கைகளை முகாமைத்துவம் மேற்கொள்ளவில்லை. | இது தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வறிக்கையின் பரிந்துரைப்படி எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றேன் | முற்பணக் கணக்கு மீதிக்குரிய கால முடிவில் அதனைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2015 மே 05 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை | றுஹுணு பல்கலைக்கழகத்தில் 2016 முதல் மீளாய்வாண்டின் செப்டம்பர் வரை நடாத்தப்பட்ட நிலைமை பாதுகாப்பு முகாமைத்துவச் சபைக் கூட்டங்களுக்கு உயர்மட்ட முகாமைத்துவம், ஒவ்வொரு | நிலைமைப் பாதுகாப்பு முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் பல்வேறு விடயங்களுக்குமான பரிந்துரைகள் மேற்கொள்ளப்படும். அவை செனேட் சபைக்கும் பணிப்பாளர் சபைக்கும் | பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும் பரிந்துரை மிகவும் ஆக்கபூர்வமாக அமைவதற்கு உயர்மட்ட முகாமைத்துவத்தின் பங்குபற்றல் மிகவும் முக்கியமாகையால் சுற்றறிக்கைப் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதவிக்குமேற்ப, 19 முதல் 55 சதவீதமான குறைந்த அளவிலான பங்குபற்றுதலாகவே இருந்தது. | அறிவிக்கப்பட்டு செனேட் சபையும் பணிப்பாளர் சபையும் தீர்மானங்களை மேற்கொள்ளும். ஆகவே, கூட்ட எண்ணிக்கையை தீர்மானிப்பது சம்பந்தமாக பிரச்சினைகள் எழாது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டின் இலக்கமற்ற இடைக்கால பிரமாணக் குறிப்பின் 5.2 ஆம் பிரிவு | 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு பீடமும் நடாத்திய நிலைமை பாதுகாப்பு கூட்டத் தொடர்களின் எண்ணிக்கை ஆண்டொன்றிற்கு 01 முதல் 08 ஆக அமைந்திருந்தது. | பீடங்களின் பாதுகாப்புக் குழுத் தலைவர்கள் இது தொடர்பாக உணர்த்தப்பட்டு இடைக்காலப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு பாதுகாப்பு குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிலைமைப் பாதுகாப்பு குழுக் கூட்டங்கள் மாதத்திற்கு ஒரு முறையேனும் கூட்டங்களை நடாத்தி பல்கலைக்கழகத்தை உயர் நிலைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தலையீடு செய்ய வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட கேள்வி வைப்பாகிய ரூபா 369,720 மற்றும் 2012 முதல் 2016 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 26,837,282 நிறுத்தி வைத்த பணம் என்பன தொடர்பாக 571 ஆம் நிதிப்பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்காய்வில் தெரிவிக்கப்பட்ட அநேகமானவை கேள்வி வைப்பு மற்றும் நிறுத்தி வைத்த பணக் கொடுப்பனவுக் கடப்பாட்டுக்குள் வருவனவாதலால் காலங் கடந்த வைப்பாகக் கருதப்படவில்லை. குறித்த வைப்புக்களை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தொடர்புடைய பகுதித் தலைவர்கள் கோரப்பட்டுள்ளனர். | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 381 க்கமைய நடவடிக்கை எடுக்காது 2017 ஆம் ஆண்டில் 02 வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியளவில் இவ்விரண்டு கணக்குகளதும் மீதிகளது கூட்டுத் தொகை | நிதிப்பிரமாணம் 581 இன் பிரகாரம் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கை (Official Bank Account) ஆரம்பிப்பதற்கு திறைசேரியின் அனுமதி பெறப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், | அரச நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கும் சகல கணக்கும் உத்தியோகபூர்வ கணக்கேயாதலால் நிதிப்பிரமாணத்தின்படி திறைசேரியின் அங்கீகாரமின்றி |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 5,226,403 ஆகும். | இவ்வங்கிக் கணக்கு நடைமுறைக் கணக்கு அல்ல. காசோலைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுவதுமில்லை. ஆகவே, திறைசேரியின் நிதி பயன்படுத்தப்படாமையானது உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு ஆக இல்லாதிருப்பதால் திறைசேரியின் அனுமதி கோரப்படவில்லை. | வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிக்க முடியாது. |
| (இ) | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் 11 ஆம் பிரிவு மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 45 இன் 2 ஆம் பிரிவின் (XV) பந்தியின் பிரகாரம் நிதி அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் உயர் கல்வி அமைச்சினது ஒருமைப்பாடும் பெறப்படாது பணமெதுவும் முதலீடு செய்யப்படலாகாது. எவ்வாறாயினும், அதற்கு இணங்காத விதத்தில் பல்வேறு நிதியக் கணக்குகளில் உள்ள பணம் நிலையான வைப்புக்களிலும் சந்தை முதலீட்டு நிதியமாகவும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அம்மீதி ரூபா 260,362,433 ஆகவிருந்தது. | கணக்காய்வில் தெரிவிக்கப்பட்ட முதலீடுகள் பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டம் 45 இன் 02 ஆம் பிரிவினது 11 மற்றும் xv பந்திகளின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அதிகாரத்துடனும் ஒவ்வொரு நிதியத்தினதும் நோக்கத்திற்கும் அமைய பல்வேறு அங்கீகாரங்களின் கீழ் முதலீடு செய்யப்பட்டனவாகும். இது தொடர்பாகத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தயவாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். | நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

---

### நிதிப் பெறுபேறுகள்

---

மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேறு ரூபா 134,979,328 பற்றாக்குறையாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 217,329,657 ஆகும். அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிப்பெறுபேற்றில் ரூபா 82,350,329 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீண்டுவரும் மானியம் ரூபா 438,700,000 அதிகமாகக் கிடைக்கப் பெற்றமையே இந்த அதிகரிப்பிற்கான முக்கிய காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உயர் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்தினால் நிதி உதவி மற்றும் சம்பளத்துடன் கூடிய கல்விசார் விடுமுறையைப் பெற்ற 04 விரிவுரையாளர்கள் குறித்த பட்டப்படிப்பை பூர்த்தி செய்யவில்லை. இந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிடப்பட வேண்டிய நிதிசார் அறவீட்டை அறவிடுவதற்கு 2019.02.11 அன்று நடைபெற்ற 388 ஆம் இலக்கப் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கடித மூலம் இது தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அறவீட்டிற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | உயர்கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்கு விரிவுரையாளர்களை அனுப்பும்போது உடன்படிக்கையில் ஈடுபடுதல் மற்றும் உடன்படிக்கை மீறப்படுமாயின் அச்சந்தர்ப்பத்திலேயே குறித்த தொகை அறவிடப்படல் என்பவற்றிற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மருத்துவப் பீடப் பதவியணியினருக்கு 20 உத்தியோகபூர்வ மனைகளும், பொறியியல் பீடத்திற்கு 28 உத்தியோகபூர்வ மனைகளும் உள்ளன. மனைகளுக்கான எதிர்பார்ப்புப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. சில மனைகளில் 05 ஆண்டுகளுக்கு மேலாக 01 முதல் 12 ஆண்டுகளாக வசித்துவந்தபோதும், உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விண்ணப்பதாரர் 05 ஆண்டுகள் உத்தியோகபூர்வ மனையை பயன்படுத்துபவர் எனும் நோக்கில் எதிர்பார்ப்புப் பதிவேடு பேணப்படுவதில்லை. 2016 முதல் 05 ஆண்டுகளுக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகின்றது. அதற்கமைய, எதிர்காலத்தில் 05 ஆண்டு காலப்பகுதியின் பின்னர் குடியிருப்பவர் அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தியோகபூர்வ மனைகளுக்கான எதிர்பார்ப்புப் பதிவேட்டை நாளதுவரையாக்கிப் பேணுவதன் மூலம் மனைகள் தேவைப்படும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு அவற்றைப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | எரிபொருள் கையிருப்புக்கு களஞ்சியத்தில் உத்தியோகத்தர் ஒருவர் பொறுப்பாக இல்லாதிருப்பதுடன், மின்சாரக் கட்டுப்பாட்டாளரால் எரிபொருள் கட்டளைக்கேற்ப எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து | மின் உற்பத்திச் சாதனத்தின் எரிபொருள் நிரப்புதலுக்காக பயன்படுத்தப்படும் படிவத்தில் பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவர் கையெழுத்திடுவதால் இந்த நலிவைக் குறைத்துக் கொள்ளலாம். | எரிபொருளைப் பெறுதல் மற்றும் வழங்குதல் சம்பந்தமான விதி முறைகள் மாற்றஞ் செய்யப்பட்டு, குறைபாட்டிற்கான வழி நீக்கப்பட வேண்டும். |

எரிபொருள் பெறப்பட்டு அவராலேயே பயன்படுத்தப்படும் எரிபொருள் வழங்குவதற்கான பதிவேட்டில் அது குறித்துக் கொள்ளப்படுகின்றது. எரிபொருள் வழங்குதல் நலிவான நிர்வாகத்திற்குட்பட்டிருந்தது.

**3.3 பொருட் கொள்வனவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விஞ்ஞான பீடத்தில் 2015 ஆம் ஆண்டில் விரிவுரையாளர் ஒருவரும் 2016 ஆம் ஆண்டில் 2 விரிவுரையாளர்களும் பெற்றுக் கொண்ட ஆராய்ச்சிப் பணமாகிய ரூபா 281,100 க்குரிய ஆராய்ச்சி அறிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் சமர்ப்பிக்கப்படாதிருந்தன. | பேராசிரியர் திருமதி டபிள்யூ.டீ.எஸ்.டீ பிரேமசந்திர தொடர்ந்து ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளதுடன் அவர் செபடிக்கல் லீவையும் பெற்றுள்ளார். விரிவுரையாளர் திரு.என்.கே கலுதரகே செயற்திட்ட நடவடிக்கைகளை இதுவரை நிறைவு செய்யவில்லை. பேராசிரியர் திரு.என்.அபேசிங்க தற்போது விடுமுறையில் உள்ளார். | ஆராய்ச்சிக்கான உதவி வழங்கப்படும் அந்த உத்தியோகத்தர்களது ஆராய்ச்சிகளுக்கான தலைப்புகள், அவற்றுக்குரிய காலம், முன்னைய ஆராய்ச்சிகள் எவ்வாறு பூர்த்தி செய்யப்பட்டன போன்ற விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு ஆராய்ச்சிக்கான உதவி வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | பல்வேறு சேவைகளை வழங்குவதன் மூலம் வருடாந்தம் உழைக்கும் வருமானத்தில் 02 மருத்துவ பீட அபிவிருத்தி நிதியங்களும் 04 பொறியியல் பீட அபிவிருத்தி நிதியங்களும் உருவாக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 131,063,381 மிகை இருந்தது. அந்த அபிவிருத்தி நிதியம் அபிவிருத்திப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படாது பயனற்றிருந்தது. | நிதியத்தின் நியமங்களுக்கும் வரவு, செலவுக்குமுட்பட பயன்படுத்துமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த பீட அபிவிருத்தி நிதியங்களின் பயன்பாடு சம்பந்தமான வழிகாட்டல் அச்சந்தர்ப்பத்தில் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. தற்போது வழிகாட்டல் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிதியங்களை உருவாக்கிய நோக்கங்களுக்கு அமைய அவற்றை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2007 ஆம் ஆண்டின் புத்தாக்க ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட இரு சக்கர டிறக்டரின் உரித்து கல்விசார் பிரிவு ஒன்றினது பேராசிரியரது பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | இந்த இரு சக்கர டிறக்டரை பல்கலைக்கழகம் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வாறுள்ளது. | செயற்திட்டங்கள் மூலம் பெறப்படும் சொத்துக்கள் குறித்த சந்தர்ப்பத்திலேயே பல்கலைக்கழகத்தின் பெயரில் சுவீகரிக்கப்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| றுஹுணு பல்கலைக்கழக நகர அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு முன்னைய ஆண்டுகளில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் 89 சதவீதமாகிய ரூபா 82,000,000 செயற்திட்டத்தின் நோக்கம் மற்றும் தொடர்புகள் அற்ற மூலதனச் சொத்துச் சுவீகரிப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | குறித்த செயற்திட்டம் எதிர்பார்த்தவாறான நிலைமையை கொண்டிராததால் பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கமைய மூலதன வருமானத் தலைப்புகளுக்கிடையே மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. | திறைசேரியின் நிதியேற்பாட்டைப் பெறுவதற்கான முன்மொழிதலில் இச்செயற்திட்டம் மூலப்பிரிவு ஒன்றாக காட்டப்பட்டுள்ளதால், அதற்கான செலவை ஈடுசெய்வதற்குத் தேவையான நிதியேற்பாட்டுடன் திறைசேரி ஒட்டுமொத்த நிதியேற்பாட்டை வழங்குகின்றது. பணிப்பாளர் சபையினரது அங்கீகாரத்துடன் இந்த நிதியேற்பாட்டை வேறு பணிகளில் ஈடுபடுத்த முடியாது. |

### 3.5 குறைவான நிதியப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ICO 3019 எனும் மருத்துவ பீட அபிவிருத்தி நிதியத்தில் மீளாய்வாண்டின் இறுதியளவில் பயன்படுத்தாத ரூபா 64,731,287 மீதி இருந்தது. அதனைப் பயன்படுத்தாது பொதுத் திறைசேரியினது மூலதன நிதியேற்பாட்டிலிருந்து மூலதனக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பிரிவுகளது தேவைகளை கருத்திற் கொண்டு பீடங்களது பரிந்துரையின்படி எதிர்காலத்தில் செலவு மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது என அறிவிக்கின்றோம். | பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட நிதியத்தில் பணத்தை நிறுத்தி வைக்காது அதனை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 36,461,805 கூட்டுத் தொகையுடைய ஆராய்ச்சி உதவி மீதியில் ரூபா4,992,293 ஆராய்ச்சி உதவி மீதி இரண்டு முதல் 05 ஆண்டுகளாகக் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. | குறைவாகப் பயன்படுத்தப்படும் ஆராய்ச்சி உதவி மற்றும் நிதியம், நிதியத்தின் நோக்கம் மற்றும் வரவு, செலவுக்குட்பட உபயோகப்படுத்தப்பட வேண்டுமென குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய துறைகளை இனங்கண்டு விரிவுரையாளர்கள் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு ஆராய்ச்சி உதவி பயனுள்ளவாறு பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய வெகுமதி மற்றும் நன்கொடைக் கணக்கில் ரூபா 431,736,872 கூட்டுத் தொகை மீதி இருந்தது. அக்கணக்குகளில் 26 கணக்குகள் 02 முதல் 05 ஆண்டுகளாகச் செயலிழந்து இருந்தன. மீளாய்வாண்டின் இறுதியளவில் அச்செயழிலந்த கணக்குகளது மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 26,428,622 ஆகவிருந்தது. | குறைவாகப் பயன்படுத்தப்படும் வெகுமதி மற்றும் நன்கொடைக் கணக்கை நிதியத்தின் நியமங்களுக்கும் வரவு செலவுத் திட்டத்திற்கும் அமையப் பயன்படுத்துமாறு குறித்த தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | குறைந்த பயன்பாட்டிலுள்ள கணக்கு மீதிகளைக் கண்டறிந்து துரித தீர்வு காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 பொருட் கொள்வனவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி, திட்டமிடல் அமைச்சின் 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 2/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.13.4 ஆம் பிரிவு என்பவற்றிற்கு ஒவ்வாதவாறு மருத்துவ பீடத்தின் சிற்றுண்டிச்சாலையைப் பழுதுபார்ப்பதற்கும் கட்டிடத்தில் வர்ணம் பூசுவதற்குமான வேலையின் 07 ஆம் இலக்க வேலை விடயத்தின் வேறுபாடு 13 சதவீதத்திற்கும் 112 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாக இருந்தது. | பிரதான நிர்மாண வேலை ஒன்றின்போது பிரமாணக்குறிப்பில் குறிப்பாகப் பெறுமதியை வழங்கக்கூடியபோதும், புனரமைப்பு வேலைகளுக்கு அவ்வாறாகக் கணிப்பிடுவது நடைமுறைச் சாத்தியமற்றதாகையால் பிரமாணக்குறிப்பை மொத்தமாகத் தயாரிப்பது சாதாரண வழக்காகும். எவ்வாறாயினும், ஏனைய விலைப் பட்டியல்களுக்கு measure and pay எனும் அடிப்படையிலேயே கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | ஏதாவதொரு நிர்மாண வேலை அல்லது பழுதுபார்த்தலின் போது நன்றாக ஆராயப்பட்டு வேலை விடயங்கள் நிச்சயிக்கப்பட்டு பிரமாண வேறுபாடுகள் குறையும் விதத்தில் பிரமாண விலைப்பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.1.1(இ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாது மீளாய்வாண்டில் 16 மூலதன விடயங்களுக்கு மொத்த நிதியேற்பாட்டிலும் கூடுதலாக ரூபா 255,032,110 க்கான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | மொத்த நிதியேற்பாட்டிலும் கூடுதலாக 16 மூலதன விடயங்களுக்குக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கணக்காய்வில் தெரிவிக்கப்பட்டபோதும் மேற்குறிப்பிடப்பட்ட 04 மூலதனச் செலவின விடயங்களைத் தவிர, வேறெந்த மூலதன விடயத்தினதும் மொத்த மதிப்பீட்டுப் பெறுமதி (Total Cost Estimates) அதிகரிக்கவில்லை என | பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கமைய ஆண்டிற்கான நிதியேற்பாட்டைக் கருத்திற் கொண்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கணக்காய்வின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம். சில சந்தர்ப்பங்களில் மூல மதிப்பீட்டிலும் கூடுதலாக கூடிய பௌதீக முன்னேற்றம் உள்ள செயற்திட்டங்கள் தொடர்பாக கொடுப்பனவு செய்ய வேண்டி வேண்டியேற்படுவதால் ஒவ்வொரு மூலதனச் செயற்திட்டங்களதும் செலவினத் தலைப்பிலும் வருடாந்த நிதியேற்பாட்டிலும் பார்க்க அதிகரிப்போ அல்லது சேமிப்போ ஏற்படுவது உண்டு. மேலும், நடப்பாண்டில் கூடுதலாகச் செலவினமாகிய மூலதன நிதியேற்பாட்டுத் தொகை அடுத்து வரும் ஆண்டில் மூலதன நிதியேற்பாடு கூட்டாகப் பெறப்படும் சந்தர்ப்பத்தில் ஈடு செய்யப்படும் எனவும் கணக்காய்வின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம். | |
| (இ) | கடலை அண்மித்த சுற்றாடலில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படும்போது கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் கருத்திற் கொள்ளப்படாது 2017 ஆம் ஆண்டில் ரூபா 263,074 செலவில் முகாமைத்துவ மற்றும் நிதிப் பீடத்திற்குத் கொள்வனவு செய்யப்பட்ட 14 Standard 3 seated lobby chairs மீளாய்வாண்டளவில் பயன்படுத்தப்பட முடியாதவாறு துருப்பிடித்திருந்தன. | பீடத்தின் கட்டிட லொபி கடல் காற்றினால் நேரடியாகப் பாதிப்படைவதால் இந்நாற்காலிகள் வெகு விரைவில் துருப்பிடித்துள்ளன. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் பீடத்திற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்யும்போது இவ்விடயம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் எனக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | கொள்வனவுகளின் போது எதன் பொருட்டு கொள்வனவு செய்யப்படுகின்றது என்றும் அதன் பொருட்டான உசிதமானதும் சுற்றாடலுக்கு உகந்ததுமான நிலைமை என்ன என்பதும் கருத்திற் கொள்ளப்பட்டுக் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் பரிந்துரை செய்யப்பட வேண்டும். |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

---

**(அ) கல்விசார் பதவியணி**

---

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொறியியல் பீடத்தின் அங்கீகரிக்கப்பட்ட 04 பேராசிரியர் பதவிகளும் வெற்றிடமாக இருந்தன. பல்கலைக்கழகத்தின் | பொறியியல் பீட வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளபோதும் அப்பீடத்தின் பேராசிரியர் | பதவி வெற்றிடங்கள் துரிதமாக பூர்த்தி செய்யப்பட்டு நிறுவனத்தின் |

| | | |
|---|---|---|
| 09 பீடங்களில் 154 விரிவுரையாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவின. அதில் மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், விஞ்ஞான பீடம் என்பவற்றினது வெற்றிடங்கள் முறையே 32, 23, 22 எனும் உயர் அளவில் இருந்தன. | பதவிகளுக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை. மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம் என்பவற்றில் நிலவும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. குறித்த மூல வேலைகள் நடைபெற்றவாறுள்ளன. | தொலைநோக்கை அடையுமாறான மனிதவளத்தை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) கல்விசாராப் பதவியணி**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கல்விசாராப் பதவியணியில் 14 நிறைவேற்றுதரப் பதவிகளும் 156 நிறைவேற்று தரம் அல்லாத பதவிகளும் 74 சிற்றூழியர் பதவிகளும் வெற்றிடமாக இருந்தன. | இவ்வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் நடைபெற்றுள்ளதென அறியத்தருகின்றோம். | பதவி வெற்றிடங்கள் துரிதமாக பூர்த்தி செய்யப்பட்டு நிறுவனத்தின் தொலைநோக்கை அடையுமாறான மனிதவளத்தை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்பரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கையில் நிறுவனத்தின் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, தற்போதுள்ள பதவியணி என்பன தொடர்பான விபரம், குறித்த ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்டம் என்பன வருடாந்த வரவு, செலவு அடிப்படையிலான முன்னுரிமைக்கேற்ப தயாரிக்கப்பட்டு நடவடிக்கைகள், பொருட் கொள்வனவுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பவற்றை உள்ளடக்குமாறு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | 2019 - 2023 க்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் உள்ளடங்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைப் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு பிரிவு 06 உத்தியோகத்தர்களை உள்ளடக்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தை நிறைவு செய்யும் விதத்தில் உத்தியோகத்தர்களுக்கு பணி ஒப்படைப்பு நிரலின் மூலம் கணக்காய்வு நடவடிக்கைகள் ஒப்படைக்கப்படவில்லை. 2018 ஆம் ஆண்டில் நிறைவு பெறாத கணக்காய்வுத் துறையை நிறைவு செய்யும் விதத்தில் 2019 ஆம் ஆண்டில் கணக்காய்வுத் திட்டத்தை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் சகல உத்தியோகத்தர்களுக்கும் சகல பணிகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனத் தயவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். 2018, 2019 ஆம் ஆண்டுகளில் நிதிப்பிரமாணம் 134(2) க்கமைய உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதெனத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். | ஆண்டிற்கான கணக்காய்வுத் திட்டம் நிறைவு பெறும் விதத்தில் பணி ஒப்படைப்பு நிரலின் மூலம் உத்தியோகத்தர்களுக்கு பணியை ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.3 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டம் வரவு, செலவுத் திட்டத்தின் பிரகாரம் பழுதுபார்த்தலுக்கும் மூலதனச் சொத்துக்களுக்கும் ரூபா 117,000,000 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டில் போதிய நிதி ஏற்பாடு செய்யப்படாதிருக்க, 2018 ஆம் ஆண்டில் அதன்பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 75,000,000 ஆகும். இது முன்னைய ஆண்டை விட ரூபா42,000,000 குறைவானதாகும். கணக்காய்வுத் தினமான 2018 செப்டெம்பர் 30 ஆந் திகதியளவிலும் அச்செலவினம் ரூபா 135,354,653 அதாவது, மதிப்பீட்லும் பார்க்க 80 சதவீதம் அதிகரித்திருந்தது. அதற்கமைய, சாத்தியமான அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2018 ஆம் ஆண்டில் திறைசேரியினது நிதியேற்பாட்டின் அடிப்படையில் செலவிடப்பட்ட மூலதனச் சொத்துக்கள் மீண்டுவரும் செலவின மதிப்பீட்டை விட 45 சதவீதம் கூடுதலாகும். 2019 ஆம் ஆண்டிற்கான மூலதன நிதியேற்பாட்டில் கூடிய அச்செலவினத்தை ஈடுசெய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். | சாத்தியமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.4 சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பல்கலைக்கழகத்தின் கழிவுகளை அகற்றும் பணி Target Environmental Service நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. வேலை உடன்படிக்கைப் பிரகாரம் கழிவுகளை அகற்றும்போது அவை அழிவடைவன மற்றும் அழிவடையாதென என பிரித்தொதுக்கப்பட்டு அகற்றப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், றுஹுணு பல்கலைக்கழகத்தில் அப்புறப்படுத்தப்படும் கழிவுப்பொருட்கள் வகைப்படுத்தலின்றி கொட்டவில கழிவுப்பொருள் பிரிவில் ஒப்படைக்கப்படுவது அவதானிக்கப்பட்டது. | கழிவுப்பொருட்களை வகைப்படுத்தி அப்புறப்படுத்தமாறு Target Environmental Service நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் பொருட்டு பிளாஸ்டிக் பைகளை வழங்கி வெல்லமடம கூட்டுத்தொகுதியில் 10 நிலையங்களில் வைத்திருக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றாடலுக்கு உகந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குவதன் மூலம் பல்கலைக்கழகத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவத்தை மேற்கொள்ளத் தலையீடு செய்ய வேண்டும். |